அரசாங்க நிருவாகச் சுற்று நிருபம் இல.24/92

இல.1/36/2/2(ஜி)89-90
இணைந்த சேவைகள் பிரிவு.
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07.
1992 ஜூன் மாதம் ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின்
செயலாளர்கள் அனைவருக்கும்,

## பொது எழுதுநர் சேவையின் 1 - ஆம் வகுப்புக்குப் பதவியேற்றம் - 1990.

பொது எழுதுநர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கிணங்க பொது எழுதுநர் சேவையின் 11 ஆம் வகுப்பின் 'அ' பிரிவில் உள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தரர்களைப் பதவியேற்றஞ் செய்வதன் மூலம் பொது எழுதுநர் சேவையின் 1 ஆம் வகுப்பில் 31-12-1990 ஆம் திகதியன்றுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

02. முன்னைய நிறைவேற்று எழுதுநர் வகுப்பில் 11 ஆம் தரத்திற்கு 30.06.1974 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதவியேற்றப்பட்டவர்களுடையதும் 30.06.1974 ஆம் திகதியில் பொது எழுதுநர் சேவையின் 11 ஆம் வகுப்பின் 'அ' பிரிவுக்கும் பதவியேற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் யாவரினதும் தகுதியை மதிப்பிட்டு பதவியேற்றுவதற்கு அவர்கள் சம்பந்தமாக விசேட அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகியுள்ளது.

03. (1) இவ்வறிக்கைகள் இணைக்கப்பட்ட விசேட மாதிரிப் படிவத்தில் இருத்தல் வேண்டும். 1 ஆம் பாகம் உத்தியோகத்தரினால் மட்டும் நிரப்பப்பட்டுத் திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். திணைக்களத் தலைவர் அதன் 11 ஆம் பாகத்தை நிரப்பி உறுதிப்படுத்தல் வேண்டும்.

(11) இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விசேட அறிக்கைகள் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு 31.07.1992 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

(111) கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது வேறு நியதிச்சட்ட சபைகளுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்கள் அறிக்கைகளை உரிய முறையில் பூர்த்தி செய்து தத்தமது தலைவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தலைவர்கள் 11 ஆம் பாகத்தைத் தாமே உறுதிப்படுத்திப் பின்னர் பொருத்தமான அதிகாரியினூடாக இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு 31.07.1992 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

04. இணைந்த சேவைகள் பிரிவினால் பெற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு விசேட அறிக்கையும் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். அவ்வாறு கிடைத்தமை பற்றிய அறிவித்தல் 30.08.1992 ஆம் தேதியளவில் வந்து சேரப் பெறாத உத்தியோகத்தர் தாமதமின்றி இணைந்த சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

05. இதன்படி வேண்டிய தகைமைகளை பூர்த்திசெய்திருக்கின்ற உத்தியோகத்தர்கள் அனைவரும் தத்தமது விண்ணப்பங்களை குறித்த திகதிக்கு முன்னராக சமர்ப்பபிக்க வேண்டியதுடன் 1992.07.31 ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

06. இச்சுற்று நிருபத்தில் கூறப்பட்ட விடயங்களை உங்கள் திணைக்களத்தில்/அமைச்சில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் உங்கள் அமைச்சின் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் கொண்டு வருக.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

டபிள்யு. பி. எஸ். ஜயவர்தன.
இணைந்த சேவைகள் பணிப்பாளர்.

தேவா/16.

பொது எழுதுநர் சேவையின் 1 ஆம் வகுப்புக்குப்
பதவியேற்றம் - 1990.

பகுதி 1 (உத்தியோகத்தரினால்
பூர்த்தி செய்யப்படுவதற்கு)

1. முதலெழுத்துக்களுடன் உத்தியோகத்தரின் பெயர் :-
   (அ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-
   (ஆ) முதல் நியமனம் பெற்றபோது பாவித்த பெயர்கள் :-

---

2. பிறந்த திகதி :- நிரந்தர வதிவிடத்து முகவரி :-

---

3. (அ) பொது எழுதுநர் சேவையின் முன்னைய 11ஆம் தர நிறைவேற்று எழுதுநர் சேவைக்கு/பொ.எ.சே.11 'அ' பிரிவுக்கு நியமனம் பெற்ற திகதி :-
   (ஆ) 31.12.1990 ஆம் திகதியன்று வருடாந்த (திரட்டிய) வேதனமும் அவ்வேதனத்தை பெற்ற திகதியும் :-

---

4. முதன்முறை நிரலில் உத்தியோகத்தருக்கு ஏதேனும் இலக்கம் அளிக்கப்பட்-டிருந்தால் அந்த இலக்கம் :-

---

5. தற்போதைய திணைக்களம் :-
   (அ) அங்கு சேவைக்காலம் :-
   (ஆ) அலுவலக முகவரி :-

---

6. (1) பொது எழுதுநர் சேவையின் பிரமாணக்குறிப்பின் 15 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளீரா ?
   (11) அவ்வாறாயின் அப்பரீட்சையில் சித்தியடைந்த திகதி :-
   (111) அப்பரீட்சை பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் திகதியும் இலக்கமும் :-
   (1V) பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்பின் அது பற்றிய விபரங்கள் :-

   அல்லது.

   (V) வினைத்திறமை காண் தடைப்பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அது நடைமுறைப்படுத்தப்பட்ட திகதியும்-தொடரிலக்கமும் :-

---

7. 31.12.1990 ஆம் திகதிக்கு நேர் முன்னதாக 5 வருட காலப்பகுதியில்
   (1) சகல வேதனவேற்றங்களையும் பெற்றுள்ளீரா? :-
   (11) ஏதாவது தண்டனைக்கு/தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளீரா :-
   (111) உங்களுக்கு எதிராக ஏதாவது ஒழுக்காற்று நடவடிக்கை தொடரப்-பட்டதா?
   தற்போதைய நிலைமையைத் திகதிகளுடன் விளக்குக :-

---

08. கூட்டுத்தாபனமொன்றில் சேவைக்காக நீர் இப்பொழுது விடுவிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்களைத் தருக :-

.............................ஆகிய நான் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்பதையும் சரியானவை என்பதையும் தெரிந்து கொண்டே முக்கியமான எந்த உண்மையையும் மறைக்கவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் தரப்பட்ட விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கண்டு பிடிக்கப்பட்டால் பொ.எ.சே.1 க்கான எனது பதவியேற்றக் கோரிக்கை கவனத்திற் கொள்ளப்படமாட்டாதென்பதையும் எனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :-

..............................
உத்தியோகத்தரின் கையொப்பம்.

---

## பகுதி 11

அமைச்சின் செயலாளர்/மாகாண சபையின் செயலாளர்
திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(பொருத்தமற்றவற்றை நீக்கிவிடுக)

(1) எனது அமைச்சில்/திணைக்களத்தில் உள்ளவரும் 'பொ.எ.சே. இன் 11 'அ' பிரிவின் எழுதுவினைஞருமான திரு/திருமதி/செல்வி .................. ஆல் தரப்பட்ட மேற்போந்த கூற்றின் விபரங்களை நான் பரிசீலனை செய்ததையும் அவை சரியானவை என நான் திருப்திப்படுவதையும்,

(11) அவருக்கு/அவளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தற்கு நான் கருதவில்லை என்பதையும்.

பொது எழுதுநர்-சேவையின் 1 ஆம் வகுப்புக்குப் பதவியேற்றப்படுதற்கு அவர்/அவள் எல்லா அம்சங்களிலும் தகுதி உடையவர்/தகுதியற்றவர் என சிபார்சு செய்கிறேன்.

..........................
அமைச்சின் செயலாளர்/மாகாண சபையின் செயலாளர்/திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

அமைச்சு/மாகாண சபை/திணைக்களம்/சபை/கூட்டுத்தாபனம்.

பதவிப் பெயர் :-

இலச்சினை :-

திகதி :-